## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 84/2014** **நாள். 09.11.2023**

2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 09 ம் நாள் மனுதாரர் தரப்பு 4 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | செங்கேணி | சாதி | |
| கிராமம் | முடிச்சூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 48 |

**ம..சா.4**

**முதல் விசாரணை**

நான் தற்போது மணிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கிறேன் . வழக்கு விபத்து சம்பந்தமான ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். இவ்வழக்கு விபத்தில் TN 25 AA 9190 என்ற லாரியும் TN 22 CJ 4336 என்ற டாடா ஏசி வாகனமும், சம்பந்தப்பட்டுள்ளது. விபத்து 06.12.2013 காலை 4.45 மணிக்கு நடந்துள்ளது. முதல் தகவல் அறிக்கை லாரி ஓட்டுநருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை காவல் ஆய்வாளர் சுப்பிரமணி என்பவர் புலன் விசாரணை செய்துள்ளார். 279, 338, 304(A) படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை தாக்கல் செய்ததற்கான ஆவணங்கள் வழக்கு கோப்பில் இல்லை. 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 7 சாட்சிகளின் வாக்குமூலங்கள் கோப்பில் உள்ளது. மேற்படி சாட்சிகள் லாரியின் ஓட்டுநரின் கவனகுறைவால் தான் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளது. இவ்வழக்கு 468 சிஆர்பிசி படி முடிக்கப்பட்டுள்ளது. **வழக்கு முடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ-7/ம.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பில் விபத்தில் சம்பந்தப்பட்ட டாடா ஏசி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழக்கு கோப்பில் உள்ளது. அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ. 8/ம.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. லாரியின் பதிவு ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் . அது ம.சா.ஆ. 9/ ம.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்படுகிறது. சாட்சிகளின் வாக்குமூலம்**

**சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது. ம.சா.ஆ. 10/ம.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் லாரியின் ஓட்டுநர் உரிமம் ஆகியவை வழக்கு கோப்பில் இல்லை. நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் .

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வழக்கின் புலன் விசாரண அதிகாரி இல்லை என்பதால் வழக்கு விபத்து யாருடைய கவனகுறைவால் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. புகாரில் முன்னால் சென்ற லாரியின் மீது பின்னால் சென்ற டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் நேரடி சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். விபத்தை யாரும் நேரடியாக பார்க்கவில்லை என்பதால் தான் புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன நபர் டாடா ஏசி வாகனத்தில் இடது புறத்தில் அமர்ந்து சென்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்திற்கு லாரி காரணம் இல்லை என்பதால் தான் மோட்டார் வாகன ஆய்விற்கு லாரியை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநர் தான் காரணம் என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.